உ

TAMIL POETICAL SELECTIONS.

(GROUP-A).

For the use of IV & V Forms.

By

S. M. RAGHUNATHA BHARATHY,

Tamil Pundit, National High School,

NEGAPATAM.

Printed at

"THE EDWARD PRESS,"

NEGAPATAM.

1923

Rights Reserved.]

கடவுள் துணை.

1. கடவுள் வாழ்த்து.

விநாயகர் துதி.

1. ஏரானைக் காவினுறை யென்ஞானக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவருந் தான்.

2. நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

கலைமகள் துதி

3. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

சிவபெருமான் துதி.

4. உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருமால் துதி.

5. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

6. ஆதித் தனிக்கோல மானான் அடியவர்க்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே யெனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை.

முருகன் துதி.

7. ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசரொடு ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

அநுமான் துதி.

8. அஞ்சிலே யொன்றுபெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாக ஆரியர்க்காக வேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்கைக்கண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தான் அவனெம்மை யளித்துக்
[காப்பான்.

II. குமரேச சதகம்.

வேளாளர் இயல்பு.

1. நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்
நாடோறு மழைபொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில்வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல்புவி செழிக்குநலமும்
சபசோப னங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்

வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகர்கள் கொள்விலையும்
விற்பனையு மிக்கபுகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூரர்வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவனன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே

ஈதின்றி ஈதுசிறவாதெனல்.

2\. குருவிலா வித்தைகூ ரறிவிலா வாணிபங்
குணமிலா மனைவியாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமிலாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாதநிட்டை
தீபமில் லாதமனை சோதர மிலாதவுடல்
சேகர மிலாதசென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுகல்
உண்மையில் லாதவசனம்
யோசனை யிலாமந்த்ரி தயிரிய மிலாவீரம்
உதவியில் லாதநட்பு
மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென்பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

இதினும் இது நன்றெனல்.

3 கடுகடுத் தாயிரஞ் செய்குவதி னின்சொலாற்
களிகொண் டழைத்தனன்று

கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினின்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னரைக்காசு
வேளைகண் டுதவனன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்னனன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னோயற்ற
தாரித்தி ரியநன்றுகாண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக ஞனமுதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

கைவிடத் தகாதவர்.

4. அன்னைதந் தையர்களையு மற்றைநாண் முதலா
வடுத்துவரு பழையோரையும்
அடுபகை வரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரையும்
தன்னைநம் பினவரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மையும்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரையும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையும்
நாளுந் தனக்குறுதியாய்
நத்துசே வகரையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாதுகாண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வணவள்ளலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

III. அரிச்சந்திர புராணம்.

மயானகாண்டம்.

1. ஓடினாள் உள்ளமெல்லாம் உருகினாள் கருகிமேனி
வாடினாள் விறகுவைத்த வடத்தினுக் கருகேவந்தாள்
நாடினாள் கழுகும்பேயும் நரிகளும் குறளுந் துன்றிக்
கூடிய குழவினாப்பண் குமரனைச் சென்றுகண்டாள்.

2. கண்டனள் கதறிவீழ்ந்தாள் கழுகெலாம் இரியல்போகக்
கொண்டதோர் மகவினாசை ஆவியைக் கொள்ளைகொள்ள
முண்டகக் கரத்தாலேந்தி முருகனை மடிமேல்வைத்தே
அண்டரு மறுகியேங்க வாய்திறந் தாற்றலுற்றாள்.

3. பனியா னனைந்து வெயிலா லுலர்ந்து
பசியா லலைந்து முலவாய்
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதிபாவ மென்கொல் அறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே
இனியாரை நம்பி உயிர்வாழ்வ மென்றன்
இறையோனும் யானும் அவமே.

4. நிறையோசை பெற்ற பறையோசை யற்று
நிரையாய் நிறைந்த கழுகின்
சிறையோசை யுற்ற செடியூ டிறக்க
விதியா ரிழைத்த செயலோ
மறையோ னிரக்க வளநா டனைத்தும்
வழுவா தளித்த வடிவேல்
இறையோ னளித்த மகனே யுனக்கு
மிதுவோ விதித்த விதியே.

5. செங்கோ லறத்தின் முறையே செலுத்து
திறலோ னெவர்க்கு முரவோன்
வெங்கோப யானை விறன்மன்ன னம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள்

பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு மகிழ்ந்த பரிவால்
எங்கே யெனுசை மகனென் றுரைக்கில்
இனியேது சொல்வன் மகனே.

6. நல்லோர் வருத்த முறையா மறங்கள்
நாலெட்டி லொன்று குறையேம்
இல்லோரை யற்ப மிகழோம் இறுக்கு
மிறையன்றி யேற வுகவேம்
சொல்லோ மறுத்து முரையோ முரைத்த
துறவோர்கள் புத்தி கடவேம்
எல்லோர் தமக்கு மினிதே விளைப்ப
மேதாக வந்த திதுவே.

7. மறைநீதி யுற்ற புறநா டழித்து
வருசேனை யாள்வ தறியேம்
அறைநீதி முற்[illegible] முணரா வமைச்சை
அணிவ[illegible] வைத்து மறியேம்
குறையே யி[illegible] வினையே விளைத்த
குடி[illegible] ருந்து மறியேம்
இறையே த[illegible]ன் விளைவே யெமக்கு
மிது[illegible]த்த விதியே.

8. என்று யகன்[illegible] மணிமார்பிலேறி
விளையாடு[illegible] வெழிலோய்
மூ.ன்றுய் விளை[illegible]ன்மூழ்க வெம்மின்
முதலே நட[illegible]லாய்
செங்காய் திரண்டு [illegible]கா னிருந்து
தெளியா திரங்[illegible]னை நீ
அன்றுய் வருந்த லென்றுதை துன்றன்
அறிவுக்கடாது மகனே.

9. மறவா ளெயிற்று மணிமா சுணத்தின்
வலியா லிறந்து ளவெனே
டிறவா திருக்கு மதிபாவி தன்னை
டுறவே தெனக் கருதியோ

திறவாய் சிவத்த கனிவாய் உரைத்தல்
செய்கிலாய் முகத்து விழியாய்
பிறவாத நித்த னடியே வழுத்து
பெருமா னளித்த மகனே.

காசிராஜன் புதல்வனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்திரமதியை அவ்வரசனுணைப்படி கொல்ல அரிச்சந்திரன் கத்தியை உருவிநின்றான்.

10. அந்த வேளையில் கௌசிகன் விரைந்துவந் தரசே
இந்த நோதக வெய்தலென் எனக்குநீ முன்னம்
தந்த நாடியான் தந்திலேன் எனுமொழி சாற்றி
உய்ந்து நாடுமிவ் வுயிர்களும் பெறுகென வுரைத்தான்.

11. சேர நின்றவன் செப்பிய தாங்கவ ரன்றி
யாருங் கேட்டிலர் வசிட்டனு மமரரு மறிந்தார்
வீர வேந்தனு மங்கையும் அவனடி வீழ்ந்திங்
கியாரைநீ யிந்த எழைமைக் காட்செய்தி யென்றார்.

12. சேய்மை யண்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையாம் மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

13. புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியோம்
கலை யுணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ.

14. இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினு மெய்மையை விடேமால்.

15. பதி யிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதி யிழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதி யிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதி யிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த திருமொழி.

IV. 10-ம் திருமொழி.

1. அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்குஞ்சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி
விண்முழுது முயக்கொண்ட வீரன்றன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை யிராமன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எங்கடனி முதல்வனையெம் பெருமான்றன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும்நாளே.

2. வந்தெதிர்ந்த தாடகைதன் உரத்தைக்கீறி
வருகுருதி பொழிதரவன் கணையொன்றேவி
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன்காண்மின்
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான்றானே.

3 செவ்வரிநற் கருநெடுங்கட் சீதைக்காகச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றிகொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன்றன்னைத்
தெவ்வரஞ்சு நெடும்புரிசை யுயர்ந்தபாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன்றன்னை
இறைஞ்சுவார் இணையடியே யிறைஞ்சினேனே.

4 தொத்தலர்பூஞ் சுரிகுழற்கை கேசிசொல்லால்
தொன்னகரந் துறந்துதுறைக் கங்கைதன்னைப்
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப்புக்குப்
பரதனுக்குப் பாதுகமு மரசுமீந்து

சித்திரகூ டத்திருந்தான் றன்னையின்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எத்தனையுங் கண்குளிரக் காணப்பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நேர் ஒவ்வார்தாமே.

5. வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்கொன்று
வண்டமிழ்மா முனிகொடுத்த வரிவில்வாங்கிக்
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கைநீக்கிக்
கரனோடு தூடணன்தன் உயிரைவாங்கிச்
சிலைவணக்கி மான்மறிய வெய்தான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி யேத்தவல்லார்
திரிதலால் தவமுடைத்து தரணிதானே.

6. தனமருவு வைதேகி பிரியலுற்றுத்
தளர்வெய்திச் சடாயுவைவை குந்தத்தேற்றி
வனமருவு கவியரசன் காதல்கொண்டு
வாலியைக்கொன் றிலங்கைநகர் அரக்கர்கோமான்
சினமடங்க மாருதியாற் சுடுவித்தானைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
இனிதமர்ந்த வம்மானை யிராமன்றன்னை
ஏத்துவா ரிணையடியே யேத்தினேனே.

7. குரைகடலை யடலம்பால் மறுகவெய்து
குலைகட்டி மறுகரையை யதனாலேறி
எரிநெடுவேல் அரக்கரொடும் இலங்கைவேந்தன்
இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசுமீந்து
திருமகளோ டினிதமர்ந்த செல்வன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
அரசமர்ந்தான் அடிசூடு மரசையல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசுதானே.

8. அம்பொனெடு மணிமாட அயோத்தியெய்தி
அரசெய்தி அகத்தியன்வாய்த் தான்முன்கொன்
தன்பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச்செல்வி [றான
உலகுய்யத் திருவயிறு வாய்த்தமக்கள்

செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதைகேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எம்பெருமான் றன்சரிதை செவியால்கண்ணால்
பருகுவோம் இன்னமுத மதியோமன்றே.

9. செறிதவச்சம் புகன்றன்னைச் சென்றுகொன்று
செழுமறையோன் உயிர்மீட்டுத் தவத்தோனீந்த
நிறைமணிப்பூ ணணியுங்கொண் டிலவணன்றன்னைத்
தம்பியால் வானேற்றி முனிவன்வேண்டத்
திறல்விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
உறைவானை மறவாத வுள்ளந்தன்னை
உடையோம்மற் றுறுதுயரம் அடையோமன்றே.

10 அன்றுசரா சரங்களைவை குந்தத்தேற்றி
அடலரவப் பகையேறி யசுரர்தம்மை
வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்குந்தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமமேவிச்
சென்றினிது வீற்றிருந்த வம்மான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
என்றுநின்றான் அவனிவனென் றேத்திநாளும்
இறைஞ்சுமினோ வெப்பொழுதுந் தொண்டீர்நீரே.

11. தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான்றன்னை
எல்லையில்சீர்த் தயரதன்றன் மகனாய்த்தோன்றிற்
றதுமுதலாத் தன்னுலகம் புக்கதீறாக்
கொல்லியலும் படைத்தானைக் கொற்றவொள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசேகரன்சொற் [செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும்வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணுவாரே.

V. தேவாரம்.

1. அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கடம் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானை பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

2 திருவேயென் செல்வமே தேனேவானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் உறவேயென் ஊனேயூனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளேநின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய்காவாய்
அருவாய வல்வினைநோய் அடையாவண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமரரேறே.

3. அப்பனீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாயென் னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவனீ ஏறூர்ந்த செல்வனீயே.

4. திருநாம மஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயிற் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோவென்னில்

பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

5. சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே.

VI. காளமேகப்புலவர்.

---

1. வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ணனிவ னென்றுங் கருதாமல்—மண்ணை
அடிப்பதுமத் தாலே யளந்தானை யாய்ச்சி
அடிப்பதுமத் தாலே யழ.

2. தாண்டி யொருத்தி தலையின்மே லேறாளோ
பூண்டசெருப் பாலொருவன் போடானோ-மீண்டொருவன்
வையானோ வின்றுமிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ யேழையா னால்.

3 கம்பமத கடகளிற்றான் தில்லைவாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டுவாடி
உம்பரெலாம் விழித்திருந்தார் அயில்வேற்செங்கை
உடையவறு முகனுங்கண் ணீரானான்
பம்புசுடர்க் கண்ணனுமோ கஞ்சுகண்டான்மால்
பயமடைந்தான் உமையுமுடல் பாதியானாள்
அம்புலியைப் படைத்திடுவ தவமேதையென்
றயனுமன்ன மிறங்காமல் அலைகின்றானே.

4. அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தான்றனக்கிங்
கெண்ணும் பெருமை யிவை.

5. காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில்—வந்ததற்பின்
வாரொன்று மைக்குழலார் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

VII. தாயுமானவர்.

---

1. ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
வாலமமு தாகவிலையோ
அக்கடலின் மீதுவட வனலிற்க வில்லையோ
அந்தரத் தகிலகோடி
தாழாம னிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளையவிலையோ
சத்தமே கங்களும் வஜ்ரதா ரணையிற்
சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவே ராமனடி யாற்சிலையு
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ
பாழான வென்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்தமே.

2. ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேச னிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா னானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையருளுவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்தமே

3. கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கன்மத்தை யென்சொல்வேன் மதியையென் சொல்லு
கைவல்ய ஞானநீதி [வேன்
நல்லோர் உரைக்கிலோ கன்மமுக் கியமென்று
நாட்டுவேன் கன்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியில்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

4. கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னவனந்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மவுனியாய்ச்
சும்மா விருக்கவருளாய்
சுத்தநிற் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

5. கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்
சலமே னடக்கலாங் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

VIII. திருவெண்காடர்.

பட்டினத்தார்.

---

1. இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரி பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

2. ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

3. பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் றிருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே.

4. ஐயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்
[பெற்ற
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப கார்ஞ்செய் யார்தமை யண்டினர்க்
[கொன்
றீயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்ப
[னே.

5. காம்பிணங் கும்பனைத் தோளார்க்கும் பொன்னுக்குங்
[காசினிக்கும்
தாம்பிணங் கும்பல வாசையும் விட்டு தனித்துச்செத்துப்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதை யோவென்செய் வேன்றில்லைச்
[சங்கரனே

6. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ தூங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

7. வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல ஞனினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே.

8. அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

9. நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லாவுடலை அடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென்றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே.

10. அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்க
ளெத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே.

IX. திருக்குறள்.

கடவுள் வாழ்த்து.

1. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

2. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

அறன்வலியுறுத்தல்.

3 மனத்துக்கண்மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற.

4. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம்.

5. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

செய்ந்நன்றியறிதல்

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

7. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்

8. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

ஒழுக்கமுடைமை.

9. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.

10 ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.

11. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

அழுக்காறாமை.

12. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்.

13. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டிவிடும்.

தீவினையச்சம்.

14. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

15. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து.

16. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

ஈகை.

17. நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று.

18. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

19. ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

20. சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை.

புலான்மறுத்தல்.

21. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

22. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

வாய்மை.

23. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

24. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

சொல்வன்மை.

25. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

26. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

27. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

பெரியாரைத் துணைக்கோடல்.

28. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

29. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

30. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

புலவர்திலகராகிய

ஆரியப்பபுலவர் அருளிய

ஸ்ரீமத் பாகவதபுராணம் (சப்தமஸ்கந்தம்.)

ப்ரஹ்லாத சரித்திரம்.

---

1. ஏர் தழைந்ததார் இரணியன் தரும்
போர் தழைந்தவேல் புதல்வர் நால்வருள்
பேர் தழைந்தமெய்ப் பிரகலாதனும்
சீர் தழைந்தவன் திறங்கள் செப்புவாம்.

2. பாடும் ஒருழிப் பச்சை மால்புகழ்
நாடும் ஒருழி நல்ல காருரு
சூடும் ஒருழிச் சொற்றுழாய் அழு
தாடும் ஒருழி அன்பு முற்றியே.

3. மண்ணில் வானின்மற் றுலகின் மன்னிவாழ்
எண்ணி லாவுயிர் உடம்பு யாவையும்
தண்ணம் தாமரைத் தலைவி மேவிய
கண்ணன் ஆகவே காணும் காட்சியான்.

4. பித்தன் என்னவும் பிரச மாந்திய
மத்தன் என்னவும் மானம் ஒன்றிலா
முத்தன் என்னவும் முன்னு மாயவன்
பத்தன் என்னவும் படரும் ஆங்கவன்.

5. உண்ணின் ஏகினாற் றுறையின் ஓர்செயல்
பண்ணின் ஓசைநீர் படியின் அன்பொடும்
பெண்ணும் ஆணுமப் பேடும் அல்லனாய்
நண்ணும் மாயவன் நாமம் ஓதுவான்.

6. தேறும் மெய்ப்பொருள் சீதரன் எனக்
கூறும் எட்டெழுத் தைக்குறித்து நா
வீறும் வான்சுவை விகலம் இன்றியே
ஈறில் மாதவர் இவனின் யாவரே.

7. ஓத லின்றியே உணர்வு கூருமிக்
காத லன்றனைக் கற்க வைத்தனன்
தாத லர்ந்தபொற் றருவின் மெல்லிணர்ப்
போத லர்ந்ததார் புரளு மார்பனே.

8. பொற்ற மாலையம் புதல்வன் தன்னைநெஞ்
சுற்ற காதலிற் கூவி ஓர்பகல்
வெற்றி வேலினான் வெள்ளி மைந்தர்பால்
கற்ற தென்னெனக் கழறி னானரோ.

9. தண்ணம் போதுசேர் தலைவி கொண்க, சூட்
டண்ணல், வாளரா அணையில் துஞ்சுகார்
வண்ண, பைந்துழாய் மார்ப, தாமரைக்
கண்ண, என்னல்யான் கற்ற தென்றனன்.

10. என்ற சொலொடுமென் இளாவல் ஆவியைக்
கொன்ற வன்பெயர் கூறு வித்தனர்
மன்ற வெள்ளிதன் மைந்தர் இத்திறம்
நன்று நன்றெனா நகை விளைத்தனன்.

11. வெள்ளி மைந்தர்தாம் வெருவி முன்னுரு
உள்ளல் யாங்களிவ் வுரை பயிற்றிலேம்
வள்ளி தழ்ப்பொலன் தாம மார்பநின்
பிள்ளை இங்ஙனம் தெற்றாம் என்றனர்.

12. அறம் இவர்க்குரீர் அறி வுறுத்துமென்
றிறை பணித்தலால் இரு பிறப்பினோர்
முறை தெரித்தமுப் பாலும் ஓதிலான்
மறை வடித்தமென் மழலை மைந்தனே.

13. தென்றமிழ் மலயந்தந்த தேங்கமழ் சாந்தம்பூசி
மன்றன்மந் தாரப்போது மதுத்துளி மாலைசூடிக்
குன்றிரண் டனையதோளான் குறங்கின்மேல் தழீஇ [இருத்தி
நன்றநின் தனைகொலென்றான் மீட்டுமந் நாமவேலான்.

14. தாதையங் ஙனம்வினவத் தநயனங் குரைப்பான் மாயன்
காதையஞ் செவியின் மாந்திக் காரணன் நாமங்கூறிப்
போதினன் முகனும் போற்றும் பொன்னடி தலையிற்சூடி
சீதரன் கோயில்சூழ்ந்து செழுமலர் பதத்திற்றூவி.

15. விழுந்திளஞ் சுரும்புமூசும் மென்முகை விண்டுதேறல்
பொழிந்தபூந் துளபமாலைப் பொருவுயர் விலானைநெஞ்சம்
குழைந்திட வறிதலன்றோ குறிக்கினன் கறிதலென்னச்
செழுந்தழல் கடைக்கண்சிந்திச் சிவப்புறச் சினந்தான் [மன்னோ.

16. அறங்கரை மழலைச்செவ்வாய் அரும்பெறற் புதல்வற் [றிண்டிணன்
குறங்கினின் றகற்றிமண்டுங் குருதிவேல் அங்கைதாங்கி
இறைஞ்சிநிற் குநரைவல்லே எறிந்திவன் அலங்கன்மாலை
சிறந்திறந் திடுமினென்றான் நெருப்புருத் தனையநீரான்.

17. ஒருவுருத் தாங்கிநின்று முத்தொழில் நடாத்துமெம்மான்
சேவடிக் கமலப்போது சென்னியிற் சூட்டப்பெற்ற
கோவிளங் குமரன்மார்பில் கொலைவலார் எறிந்த [கொற்றப்
படைக் குடுமிவெள்வேல் பூவெனப் பொலிந்தமன்னோ.

18. திருகுவெந் நிற்றத்துப்பின் செய்யவேல் உழுவர்வீசும்
எரிகுலாம் படைகள்யாவும் இற்றமை கனகன்நோக்கி
வருகமா நாகமெட்டும் மாதிரக் களிநல்யானை
பொருகவென் றாழித்தீயிற் புழுங்கினன் உரறினனால்.

19. படவர வரசின்செய்ய பணாமணி பிதுங்கப்பற்றிக்
கடல்விளை அமிழ்தமூறக் கடைந்தகார் வண்ணத் [தண்ணல்
தொடுகழற் கன்பற்கொல்வான் சுடுசினம் கதுவிக்கவ்வும்
அடுகொலைப் பாந்தளெட்டும் அமுதுவா யுகுத்தமாதோ.

20. கொண்டலிற் பிளிறுவேழக் கோட்டடி பிடுங்கிவென்ற
தெண்டிரைப் பெரும்பாலாழிச் சேர்ப்பன்மெய்த் [தொண்டன்தன்னை
மண்டுவெஞ் சினத்திற்பாய்ந்த மழைமதப் புழைக்கை [நால்வாய்
எண்டிசைக் களிறுங்கூர்ங்கோ டிற்றன சிதர்ந்தமாதோ.

21. கடலொடு மலையும்பாரும் கருதுமற் றுலகு பூண்டு
புடையொரு வயிற்றுள்வைத்துப் பொறுத்தவன் [அன்பன்றன்மேல்
தடவரை எறிந்தவெல்லாம் சாற்றணு வொத்தவாங்கு
கொடியவர் வெற்பின்வீக்கிக் குரைதிரைப் புணரி [உய்த்தார்.

22. நெடுவரை முகந்துபொங்கி நீனிற விசும்புகோத்த
உடைதிரைக் கடன்முகட்டோர் ஒழுகொளி மணியிற் [றோன்றிப்
படுசினை விரித்தவாலம் பாசிலை கிடந்தோன் அன்பன்
கடலிடை யாத்துவீழ்த்த கல்லொடு மிதந்தான் [மன்னோ.

23. இறுதியோர் திறத்திலும் இழைத்தன்மற் றரிதென் [றெண்ணி
அறமுத லாயமுப்பால் அறிதியென் றவுணன்மீட்டும்
சிறுவனை விடுப்பவாங்குச் சிறுவனால் பயிற்றுகின்ற
மறைவலார் அற்றநோக்கி மைந்தரோ டுரைக்கலுற்றான்.

24. அல்லவை குரவனேனும் அறைந்தன கேட்கலாகா
நல்லவை யாவரேனும் நவிலுறில் கேட்கற்பால
சொல்லுவன் நமக்குமெய்ந்நூல் தொடையல்யாழ் [முனிவன்சொற்ற
வல்லிதிற் கேண்மினென்ன மருவுமம் மைந்தர்சொல்வார்.

25. ஒத்தனம் நீயும்யாமும் உனக்குமற் றுரைத்ததெங்ஙன்
தத்துவம் விரிந்தசெம்பொற் றாமரை உறைவோன் [மைந்தன்
இத்திறம் நவில்வாயென்ன எரிமணிச் சுடிகைநெற்றிப்
பைத்தபாம் பணையானன்பன் பாற்படப் பகரலுற்றான்.

2 .. இருந்தவம் இழைத்தற்கெந்தை ஏகிய காலைநோக்கிச்
சுரும்புண விரிந்தபைந்தார்ச் சுடர்முடி அமரரீண்டிக்
கருங்கழல் அவுணரெல்லாம் களப்படப் பொருதுநூறி
அருஞ்சிறைப் படுத்தினனால் என்னையை அமரர் [கோமான்.

27. இடருறு சிறையென்வைப்பாய்
ஏந்திழை விடுதியென்னத்
தொடையல்யாழ் முனிவன்வந்து
சொற்றனன் சொற்றலோடும்
மடவரல் வயிற்றுமைந்தன்
உயிர்த்தபின் மகவைக்கொன்று
விடுவலென் றுரைத்தல்செய்தான்
விண்ணவர் வேந்தனம்மா.

28. கோற்றொடி வயிற்றுமைந்தன் கொல்லுதற் குரிய [னல்லன்
ஆற்றலம் திகிரியம்மான் அன்பனென் றருளிற்கூறி
மாற்றினன் சிறையான்கேட்ப மாழ்குமென் அன்னை [நெஞ்சம்
தேற்றுவான் போலமெய்ந்நூல் தெள்ளிதிற் [செப்பினனால்.

29. ஆங்கவன் காட்சிமெய்ந்நூல் அறைதர வயிற்றினுற்றேன்
தீங்கற உணர்ந்தவாறு செப்புவல் கேண்மின் என்னப்
பூங்கழல் அவுணர்பெற்ற புதல்வர்க்குப் புகறலுற்றான்
வாங்குவிற் கனகனீன்ற வயங்கெழிற் சிறுவன் மன்னோ.
30. போக்கி டாமலைம் புலன்களு மிசையுநற் போகம்
காக்கை யேமுதல் உயிரெலாம் கலக்கமில் பெரியோர்
ஆக்கை ஆவியோ டெவ்வள வுறையுமவ் வளவும்
நீக்க மின்றிமால் பதமுனி நிலமிசை உறுவார்.
31. அரிது மானிடப் பிறவிவந் தடைவதிங் கடைந்தால்
உரைசெய் ஆயுண்மிக் குறையினும் நூற்றின்மேல்
[உறையார்

விரகி லாவினை ஞோர்களாய் மெலியுமேப் பினராய்க்
கருதும் நாளவம் கழிப்பார்கண் படையினால் அன்றோ.
32. உறையும் ஆயுளிற் பாதியும் ஒழிப்பர்மற் றொழிந்து
குறையும் நாட்களும் மனைவியர் குமரரென் றவர்மேல்
நிறையும் காதலின் நீப்பரால் நெடியனை மனத்துள்
இறையும் ஓர்கிலார் பிறப்பிறப் புக்கிடன் ஆக.
33. தோற்றும் ஏழ்வகைப் பிறவியும் இரிதரத் தொலைத்து
மாற்றும் மானிடர் ஆயிவண் மருவியும் மாயன்
ஆற்றல் சேர்பதம் அன்பொடு நினைந்துவீ டடையார்
கூற்றி னாற்றுயர் வாரவர் மடமையார் குணிப்பார்.
34. பாவத் தால்வரும் பொய்புடல் யானெனப் பகரும்
நீவத் தால்வரும் இருவினைக் கட்டொடு நிகழ்த்தின்
கூவத் தேவிழும் அறிவிலாக் குருடர்போன் றாகும்
தாவத் தீச்சுட வருந்துவார் மடமையார் தணிப்பார்
35. பன்னும் நூல்பல தேர்ந்துநற் பரம்பொருள் அறியார்
இன்னல் பார்த்திடார் அழியுமோர் பிறன்பொருள் கோடற்
குன்னு வாரெனின் மைந்தர்கள் உலகினில் ஒளிசேர்
பொன்னின் மேற்செலும் விழைவையார் போக்குவார்

[அம்மா.

36. ஓது நூல்பல உலகியல் முழுவதும் உணர்ந்தும்
பேதம் நீங்குறத் தம்மைநன் கறிந்திடார் பெரிதாம்
காத லாகிய விலங்குபூண் விலங்கெனக் கருதா
மாதர் பால்மயர்ந் தாடுவர் எனினவர் மறுப்பார்.

37. கூறும் அங்கியும் தூமமும் போற்குண குணியாய்
வேறு வேறுசேர் பொருளெலாம் மேவியோன் ருகி
ஈறி லாமுத லாயுடற் கிசைவிகா ரங்கள்
ஆறும் மெய்ப்பொருட் கில்லையென் றறிவதே அறிவால்.

38. பாத வங்களின் தளிரொடு பூமுதற் பலவும்
ஓதின் வேறுவே றுருவென ஒளிருமா போலக்
கோது சேர்அறு விகாரமாம் குணமுடற் கன்றிப்
பேதம் நீங்கியே பிறங்குமெய்ப் பொருட்கில பேசின்.

39. காட்டின் மேவிய கானவிற் புனலெனக் காதல்
பூட்டும் மாயையின் முறைமுறை போந்ததத் துவத்தின்
கூட்டமேயுடல் அவ்வுடற் குலவுநன் மதியால்
நாட்டு போதமே நவையிலாப் பொருளென நவில்வார்.

40. பன்னும் ஆக்கைகொள் அவயவ முதலிய பலவும்
உன்னி ஈங்கிதன் றீங்கிதன் றெனமுறை ஒழித்துச்
சொன்ன புந்தியில் கரியெனத் தோற்றிய அறிவை
இன்ன தேபரம் பொருளென அறிவதிங் கியல்பால்.

41. புந்தி முக்குணம் பொருந்திமூன் றவத்தையும் பொருந்தும்
அந்த மின்றியவ் வவத்தையில் அறிவென அமரும்
நந்த லின்றிய பரம்பொருட் குடைமையா நாடிப்
பந்த முற்றவெவ் வினையறப் பாத்தொடோன் றுவரால்.

42. நிலவு மோர்வினை இன்றியே நித்திய மாகி
உலகெ லானிறைந் துயிரென் ஒருமுத லென்ன
இலகு சித்தென எண்ணரு சுத்தமாய் இருக்கும்
அலகில் மாயனை அறிவதற் கென்னரி தம்மா.

43. கனவு ஞாஞ்சுதல் காரண மாய்வரு மாபோல்
வினைசெய் வெவ்வுடல் தோற்றும்வெம் பேதைமை
[விளைவால்
மனத்தி னுற்றிரு மாயவன் மலர்ப்பதத் துணையை
நினையின் வீடுறும் நீங்குமவ் வினைப்பயன் விளைவே.

44. வரும் பெரும்புகழ்க் குருவொடு மருவுறப் பெற்றால்
திரும்பும் மாயவன் அடிதொழத் திங்குவிட் டுள்ளம்
நிரம்பும் மாலடிக் கன்புநன் னேசமார் புளகம்
அரும்பும் ஆக்கைநெஞ் சாநந்த வெள்ளமூற் றெழுமே.

45. காம மாயையைத் தெவிட்டிடாப் பெறுதலே கருதும்
நாம ரூபத்தோ டுறைபவர் நலனழிந் திறந்து
போமென் றுலும்பொய்ப் பொருளையே காதலித் [துழல்வார்
ஈமம் சேர்ந்துடல் எரிவதும் கண்டில ரேகொல்.

46. அயன் அரன்புரந் தராதியர் ஆக்கையும் பிறவி
நயம் தரும்வினை இழைத்திடின் ஒழிந்திடார் நவிலின்
வயம் வளர்ந்தசீர் நேமிமா னுக்கிரு வினையின்
பயன் விழைந்திடா தளிக்கினப் பாரொடொன் றுவாரால்.

47. தேவ ராயினும் அவுணர்க ளாயினும் தெரிவில்
பாவை மார்களே ஆயினும் பறவைமா நரரோ
டேவ ராயினும் மாலுழை யிருத்துமன் பினரேல்
தாவி லாதவீ டடைந்துறை வாரிது சாதம்.

48. அன்புசெய்வதிங் கரிதிலை அன்புசெய் வதுதான்
பொன்பிறங்கிய அணியெலாம் பொலிந்திருப் பதுபோல்
மன்புகழ்ச்சரா சரங்களில் மாயனென் றுரைக்கும்
நன்பெரும்பொருள் உறையுமென் றுளத்துநா டுவதே.

49. பத்திசெய் தமலன்செய்ய பதத்துணை சேர்மினென்றுத்
தத்துவம் சிறுவர்க்கெல்லாம் சாற்றினன் சாற்ற அன்னோர்
அத்தலை அறிவுமன்பும் அடைந்தனர் மறையோரஞ்சி
இத்திறம் உரைத்துமென்று இயம்பினர் கனகற்கம்மா.

50 ஆட்டிய தரங்கமுந்நீர் முகத்தெழு மமுதமள்ளி
ஊட்டிய தென்னத்தீஞ்சொல் உரைக்கும்நன் மதலைசெய்தி
கேட்டலும் பொருதுமேன்மேல் கிளரழற் சீற்றம்பொங்கி
நாட்டம்நஞ் சுமிழவெய்ய நச்சரா வென்னலானான்.

51. சீறினன் மதலைதன்னைச் சென்றுநீர் கொணர்மினென்று
வீறுசேர் அவுணரோடி மீண்டுவந் தவையினுய்க்க
ஆறறி புதல்வன்செய்ய அணிதிகழ் வதனம்நோக்கி
ஈறுநீ அடைவைதீயோய் எனவவன் இயம்பினானால்.

52. ஈறிலை இழைப்பலென்றாய் இழுதையின் இயல்பதீதாம்
நாறுபைங் கமலைகேள்வன் நன்மனு நவிலுநீரார்க்
கூறுசெய் குதல்கூற்றுக்கும் ஒல்லுமோ ஒல்லாதெந்தாய்
தேறுதி மறைகள்சான்று தேற்றமீ தையமின்றால்

53. தண்டுளி நறவுகாலும் தாமரைப் பொகுட்டின்மேய
வண்டுவீழ் ஒதிமின்னின் வயங்கவோர் மழைக்காரென்று
கண்டவர் மருளும்வண்ணம் கடலிடைக் கிடந்தமாயன்
உண்டுகொல் உலகத்தென்ன உருமென உலம்பினானால்.

54. கடலினும் உளனேவண்டு கனலவாய் வீழுமந்தண்
மடலினும் உளனேஒங்கு மலையினும் உளனேமன்னு
உடலினுள் உயிர்போலெல்லா உலகினும் உளனேவெய்ய
அடலுடை ஆழிதாங்கும் அமலனென் றறைந்தானம்மா.

55. அரும்பெறற் குழவிமாற்றம் அஞ்செவி வெதுப்பவாற்றான்
முரிந்திடப் புருவமுந்நீர் முளைத்தெழு பரிதிபோல
எரிந்தபொற் கடகஞ்சிந்த இலங்குவாள் நிலவுக்கற்றை
சொரிந்திடு பருஉத்தாட்செம்பொற் றூணிடை
[யடித்தானன்றே.

56. இடித்ததோர் அசனியென்ன எறுழ்வலிக் கனகன்சீறி
அடித்ததூ ணத்தினின்றும் ஆடகப் பசும்பொனண்டம்
வெடிப்பமால் வரைபனிப்ப வெடிபட நகைத்துவெய்தின்
வடித்தபூந் துளவமாலை வாளரி முளைத்ததம்மா.

57. மருப்பிளந் திங்களன்ன வாளுகிர் நுதியின்மாயன்
சிரிப்பின்மா மலர்க்கண்சேந்து தீப்பட நோக்குநோக்கின்
நெருப்புவாய் உமிழ்ந்தமின்னின் நிழன்றுநெய்ம்
[முகமணிந்த
அரத்தவேல் அவுணரெல்லாம் ஆருயிர் தொலைந்து
[சாய்ந்தார்.

58. ஒளிறும்வாள் ஒருகைபற்றி ஒண்சுடர் வயிரம்வேய்ந்த
கிளரொளிப் பசும்பொற்செய்ய கேடகம் ஒருகைதாங்கி
அளிபடு தொடையல்மார்பன் அண்ணலாள்
[அரியின்முன்னம்
களிமதம் செருக்கும்வென்றிக் களிறெனச்
[சினந்துசேர்ந்தான்.

59. கள்ளவிழ் துளவமார்பன் கதிர்விரி கமலச்செங்கை
வள்ளுகிர் நுதியால்மெல்லவௌவலும் வலியினீங்கிப்
புள்ளின்வாய்ப் பட்டுச்சோரும் புற்றர வென்னமாழ்கி
உள்ளழல் உயிர்ப்புவீங்கி உழன்றனன் அவுணர்வேந்தன்.

60. கழைசுளி களிறன்னானைக் கவானிடைக் கிடத்திமாலைக்
குழவிவெண் டிங்களன்ன கூருகிர் நுதியிற்பைந்தேன்
பொழிமலர் அலங்கல்மார்பம் போழ்ந்துசெங் குருதியூறி
வழிபசுங் குடர்மென்கண்ணி ஆளரி வனைந்ததன்றே.

61. ஆர்த்தனர் அமரரோடி அரும்பவிழ் பசும்பொற்போது
தூர்த்தனர் உலகமுண்ட சுடர்நகைப் பவளவாயும்
கூர்த்தவாள் உகிருங்கையுங் கொழுங்குடர் அணிந்தமார்பும்
பார்த்தனர் வெருவலுற்றார் பனியிரும் விசும்புமொய்த்தார்.

62. வெஞ்சினத் திகிரிமாயன் வெருவரு தோற்றம்நோக்கிக்
கஞ்சநாண் மலரினானுங் கண்ணுதல் பிறருமஞ்சிச்
செஞ்சுடர் விரிக்கும்போதில் தெரிவைநீ சேறியென்ன
அஞ்சினள் அணங்கும்நண்ணா அவ்வுருக் கண்டுமன்னோ.

63. மலரயன் கிரீசன்தேவர் வாசவன் முனிவர்சித்தர்
இலகுதென் புலத்தோர்நாகர் இயக்கர்கந் திருவராதி
அலகிலோர் அனுகாராகி ஆளரி உருவத்தோனைப்
பலமுறை தொழுதுபாத பங்கயம் பரவினாரால்.

64. தாளிணை வழுத்தியன்னோர் தரைமிசை விழுந்துபோற்றி
வாளுடைக் கனகன்றன்னை மாய்த்தெமைப்
[புரந்தோய்சீற்றம்
கோளரா வணையிற்றுஞ்சும் கொண்டலே தணிதியென்ன
ஆளரி கொண்டசீற்றம் அகன்றில தலக்கணுற்றார்.

65 உவரிவாய் வந்துதோன்றும் உறுசுவை அமிழ்தமென்னக்
கவிமதம் கடந்தவென்றிக் கனகனுக் குதித்ததோன்றல்
செவிமுதல் குளிர்ப்பத்தண்ணென் தெள்ளமு
[துகுத்தாலென்னப்
புவிமகள் கொழுநன்பொற்றாள் புல்லினன் பரவினானால்.

66. அஞ்சன வண்ணத்தண்ணல் அகங்குழைந் துருகியாங்குக்
கஞ்சநாண் மலரினன்ன கதிர்வளைச் செங்கைதன்னால்
செஞ்சுடர்க் குழவியன்னான் சிறுபுறந் தடவந்தென்கொல்
மஞ்சநீ விழைந்தாய்வேட்ட வரநினைக் களிப்பலென்றான்.

67. விழைவற எறிந்தார்நாடும் விழுப்பெருஞ் சுடரேதூய
பழமறைக் கொழுந்தேபச்சைப் பசும்புயல் வண்ணநின்னை
வழிபடு மன்பேயன்றி வரமெவன் பெறுவதென்னாத்
தொழுதனன் வழுத்தலுற்றான் தூயபேர் அறிஞனம்மா.

68. பூவுறை மணம்போலெல்லாப் பொருளினும்
[உறைவாய்நின்போன்
சேவடி தொழுதுபோற்றார் தேவரே எனும்நீசர்
ஆவர்பொல் லாதநீசர் ஆயினும் வணங்கிநின்சீர்
நாவினால் வழுத்திற்றேவ நாயகர் நாதராவார்.

69. எங்கும்நீ யுறைவையேனும் இலங்குகண் ணடிநோக்கின்
அங்கவர் முகங்கள்தாமே அறிவர்போல் அன்பினோர்முன்
தங்கெழில் உருவத்தோடு சார்குவை அறியுமாறுன்
பொங்குசீர் பிரமனாலும் புகழ்வதற் கடங்காதம்மா.

70. உருள்தரும் சகடுபோல ஒழிவிலாப் பிறவியுற்றேன்
மருள்தரும் பிறவியின்னும் வருங்கொலென் றஞ்சலல்லால்
தெருள்தரும் நின்னைக்கண்ட தேவர்போல் அஞ்சகில்லேன்
அருள்தரல் வேண்டுமென்பால் ஆளரி உருவத்தையா.

71. அஞ்செவி ஆயவண்டுன் அருங்கதைத் தேறல்மாந்த
நெஞ்செனும் அன்னமுன்தாள் நிரையிதழ்க் கமலம்வைக
தஞ்சமா நினதுநாமம் சாற்றுக என்நாவென்றும்
எஞ்சிலிவ் வரந்தந்திங்ஙன் இடர்க்கடல் ஏற்றுவாயால்.

72. ஆதியில் ஒருவையாகி அந்தமென் றுரைக்கும்போழ்தும்
ஏதமில் ஒருவையாகி இயம்புமிந் நடுவிற்பேதம்
ஓதுயிர் பலவுமாகி உறைதல்போல் உறைவாய்ஞான
சோதியுன் விளையாட்டெல்லாம் சொல்லவல் லுநர்யாரம்மா.

73. ஆதிமா மாயையாகி அகத்தகங் காரமாகிப்
பூதமாய்ப் பொறியாயந்தப் பொறிக்குறும் குணங்களாகிப்
பேதமாம் உயிராயொன்றாய்ப் பிறங்குசித் தாகிவைகும்
கோதிலா நின்னையன்றிக் குறிக்குமோர்
பொருளுமுண்டோ.

74. வெட்டிடும் மனையார்போகம் விரும்பிடூஉ வேறுவேறு
காட்டுமவை சிலர்கைப்பற்றத் தானையைச் சிலர்கைப்பற்ற
வாட்டமுற் றலைவார்போல வருத்துமைம் புலனும்போகம்
நாட்டமுற் றலைக்கப்பட்டோர் நலிவருன்
[அருள்நண்ணால்.

75. தோற்றிடின் வியுங்காலைத் துயருறு வதற்குமஞ்சி
ஏற்றதாய் வயிற்றின்றேத்துற் றிடருறு வதற்குமஞ்சி
மாற்றரும் சுழல்காலுற்று மறுகுமோர் சருகுபோல்வார்
போற்றிடார் நின்னையன்னோர் புலமையை [என்சொல்கேனே.

76. வெற்றிவேல் அவுணற்கொன்று விழுச்சிறப் [பளித்தோயிங்ஙன்
உற்றவெஞ் சீற்றம்நீங்கி உவந்தருள் என்றுபல்கால்
பற்றெறிந் துயர்ந்தஜந்தாம் பருவத்தோன் பரவலோடும்
ஆற்றமில் வெருளிபோக ஆளரி மகிழ்ந்ததன்றே.

77. அரும்புகழ்ப் புதல்வஉன்றன் அன்பினான் [மகிழ்ந்தேமுள்ளம்
விரும்புடற் போகம்நெஞ்சில் விழைந்திலை நீஎன்றாலும்
பொருந்துமோர் மனுவின்காலம் போற்றுசீர் வேந்தனாகி
இருந்தபின் எனதுபாதம் எய்துக எனச்சொன்னானால்

78. மானிட மடங்கலானோன் வழங்குதல் கேட்டமைந்தன்
நீனிற முகிலேநின்னை நிந்தையே புரிந்ததாதை
ஊனமாம் பாவமெல்லாம் ஒழியநீ அருள்செய்என்னாத்
தேனலர் துளவத்தம்மான் சிறுவனை நோக்கிச்செப்பும்.

79. உன்னையிங் குயிர்த்தவாற்றால் உரைக்குநின் [குலத்துமூவேழ்
என்னும்நன் மரபினோரும் இயைந்தனர் புனிதமென்றால்
அன்னவன் புனிதனாதற் கையமென் அவனுக்கீம
மன்னுநல் வினைசெய்கென்ன மைந்தனவ் வினைசெய்தானால்.

80. பெருகுசீர்ப் பிரகலாதன் பெட்பொடு வழுத்தலாலந்
நரகரி உருவத்தண்ணல் நன்குள மகிழ்ந்தானென்னா
விரிமலர்ப் பொகுட்டின்மேய விண்ணவன் முதலினோர்தாய்
அருகுவந் தணுகியன்னோன் அடிதொழு தேத்திநின்றார்.

81. விரிந்தசெங் கமலமன்ன விழிமலர்க் கருணைமாரி
சுரந்துதன் கமலப்பொற்றாள் தொழுதெழு [மிமையோர்தத்தம்
பெருந்திரு எய்தநல்கிப் பிறைநுதற் பிராட்டிபுல்ல
அரும்பவிழ் துளவத்தண்ணல் ஆயிடை மறைந்தானன்றே.

82. கற்றவர் அறியலாகாக் காட்சிநின் றறிந்ததோன்றல்
பொற்றசெங் கமலமேவும் புங்கவன் பணியினாலே
கொற்றநீள் மகுடஞ்சூடிக் குளிர்ந்தவெண் டிங்களென்ன
ஒற்றைவெண் கவிகைநீழல் உலகெலாம் புரந்தானன்றே.

83. பூட்சி யோடரி போந்திடப் போற்றுநற்
காட்சி மேய கனகன் மதலைதன்
மாட்சி நோக்கி மகிழ்ந்தயன் ஆதியோர்
ஆட்சி யாய பதத்தடைத் தாரரோ.

84. முன்பு பேசு கதைமொழி நாவினோர்
அன்பு ணோடுடன் கேட்கும் அறிவினோர்
துன்ப வாரி கடந்து துகளிலா
இன்ப வாரியின் எய்துவர் என்பவே.

ஓம் சுபம். சுபம். சுபம்.

XI. பரதன் குகனைக் காண்டல்

1. வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

2. நம்பியுமென் னாயகனை யொக்கின்றான் அயனின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்.

3. உண்டிடுக்கண் ஒன்றுடையான் உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயில் ஒருதனியே தான் வந்தான்.

4. வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனுமவன் அடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

5. தழுவினன் புளினர்வேந்தன் தாமரைச் செங்கணானை
எழுவினும் உயர்ந்ததோளாய் எய்திய தென்னையென்ன
முழுதுலக ளித்ததந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனைநீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்.

6. கேட்டனன் கிராதர்வேந்தன் கிளர்ந்தெழும் உயிரனாகி
மீட்டுமண் அதனில்வீழ்ந்தான் விம்மினன் உவகைவீங்கத்
தீட்டரும் மேனிமைந்தன் சேவடிக் கமலப்பூவில்
பூட்டிய கையன்பொய்யில் உள்ளத்தான் புகலலுற்றான்.

7. தாயுரை கொண்டுதாதை உதவிய தரணிதன்னைத்
தீவினை யென்னநீத்துச் சிந்தனை முகத்திற்றேக்கிப்
போயினை யென்றபோழ்து புகழினோய் தன்மைகண்டால்
ஆயிரம் இராமர்நின்கேழ் ஆவரோ தெரியினம்மா.

8. என்புகழ் கின்றதேழை எயினனேன் இரவியென்பான்
தன்புகழ்க் கற்றைமற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்களெல்லாம்
உன்புகழ் ஆக்கிக்கொண்டாய் உயர்குணத் துரவுத்தோளாய்.

9. எனவிவை யன்னமாற்றம் இனையன பலவுங்கூறிப்
புனைகழற் புலவுவேற்கைப் புளினர்கோன் பொருவில்காதல்
அனையவற் கமைவிற்செய்தான் ஆரவற் கன்பிலாதார்
நினைவருங் குணங்கொடன்றோ இராமன்மேல் நிமிர்ந்தகாதல்.

10. அவ்வழி யவனைநோக்கி அருட்டரு வாரியன்ன
செவ்வழி யுள்ளத்தண்ணல் தென்றிசைச் செங்கைகூப்பி
எவ்வழி யுறைந்தானம்முன் என்றலும் எயினர் வேந்தன்
இவ்வழி வீரயானே காட்டுவல் எழுகவென்றான்

11. காரெனக் கடிதுசென்றான் கல்லிடைப் படுத்தபுல்லின்
வார்சிலைத் தடக்கைவள்ளல் வைகிய பள்ளிகண்டான்
பார்மிசைப் பதைத்துவீழ்ந்தான் பருவரற் பரவைபுக்கான்
வார்மணிப் புனலான்மண்ணை மண்ணுநீர் ஆட்டுங்கண்ணான்.

12. இயன்றதென் பொருட்டினாலிவ் விடருனக் கென்றபோழ்தும்
அயின்றனை கிழங்குங்காயும் அமிழ்தென வறியபுல்லில்
துயின்றனை யெனவுமாவி துறந்திலென் சுடருங்காசு
குயின்றுயர் மகுடஞ்சூடும் செல்வமுங் கொள்வென்யானே.

13. தூண்டர நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லுவானம்
நீண்டவன் துயின்றசூழல் இதுவெனின் நிமிர்ந்தநேயம்
பூண்டவன் தொடர்ந்துபின்னைப் போந்தவன் பொழுதுநீத்த
தியாண்டென வினிதுகேட்டான் எயினர்கோன் இதனைச்சொன்னான்.

14. அல்லையாண் டமைந்தமேனி யழகனு மவளுந்துஞ்ச
வில்லையூன் றியகையோடும் வெய்துயிர்ப் போடும்வீரன்
கல்லையாண் டுயர்ந்ததோளாய் கண்கணீர் சொரியக்கங்குல்
எல்லைகாண் பளவுநின்றான் இமைப்பிலன் நயனமென்றான்.

15. என்பதைக் கேட்டமைந்தன் இராமனுக் கிளையாரென்று
முன்பொத்த தோற்றத்தேமில் யானென்றும் முடிவிலாத
துன்பத்துக் கேதுவானேன் அவனது துடைக்கநின்றான்
அன்பத்துக் கெல்லையுண்டோ அழகிதென் அடிமையென்றான்.

குறிப்புரை

1. கடவுள் வாழ்த்து.

1. ஏர் - அழகு ; என் ஆனைக்கு அன்று அளித்த (அருளிய) போர் ஆனை (யானையாகிய சிவபிரானது) கன்றுதனை (பிள்ளையாகிய விநாயகரை). சித்தி - காரியசித்தி, மோக்ஷம்.

2. தவவாய்மை முனிராசன் - தவமும் வாய்மையும் உடையவியாசர்; ஆகவம்-யுத்தம் ; (பாரதத்தை) கோடு - கொம்பு, தந்தம் ; அன்புகூர்வாம் - அன்பு மிகுவாம்.

3. கலை - வஸ்திரம் ; பணி - ஆபரணம் ; அரியாசனம் - சிங்காதனம் ; வீற்றிருப்பாள் - எழுவாய், தாய் - பயனிலை.

4. ஓதற்கு அரியவன் - இன்னதன்மையன் என்று கூறுதற்குக் கூடாதவன் ; வேணி - சடை ; அலகு இல் - அளவற்ற ; அம்பலம் - சபை.

5. நீங்கலா - நீங்குதல் அற்ற, ஒழியாத ; விளையாட்டுடையார் அவர் தலைவர் - விளையாட்டுடையவர் எவரோ அவர் தலைவர் ; சரண் நாங்களே - நாம் சரண் (அடைக்கலம்).

6. தனிகோலம் – ஒப்பற்ற உருவம் ; வேதத்தின்முன் நின்றான் - வேதத்திற்கு ஆதியானவன் ; என் என்றான் என்றதனால் ஏன் என்று கேட்டு அருள்செய்தவன் என்பது குறிப்பு. ஆனான், தோன்றினான், நின்றான், என்றான் — இவை எழுவாய், இறை - பயனிலை.

7. குன்றுருவவேல்வாங்கி நின்றமுகம் — சிவபூஜையில் தவறிய ஆயிரம் நரரை ஒருங்குண்ண நினைத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின் மரை ஓர் மலைக்குகையில் அடைத்திருந்த பூதத்தால் அக்காரணம் பற்றி அடைபட்ட நக்கீரர், திருமுருகாற்றுப்படை என்னும் நூலொன்றியற்றி முருகனைத் துதிக்க, அவர் குன்றைப்பிளந்து அவ்வாயிரவரையும் காத்தருளினாரென்பது கதைக்குறிப்பு. அருணைசலம் - திருவண்ணாமலை.

8. "அஞ்சிலே ஒன்று," என்பதற்கு முறையே வாயு, நீர், ஆகாசம், மண், தீ யெனப்பொருள் கொள்க. ஆறு - வழி.

2 குமரேசசதகம்.

1. சுகிர்தம் - தர்மம் ; வீராணசூரர் - வீரம்பொருந்திய யுத்தவீரர்.

2. திரு - அழகு ; சேகரம் - கிரீடம், தலையில் தரிப்பது, தலைப் பாகை ; மரு - வாசனை ; வண்ணமலர் - அழகியமலர்.

3. வேள்வி - யாகம் ; கரி ஓலம் என்ன - யானை (கஜேந்திரன்) அபயக்குரலிட் டழைக்க.

4. அன்றைநாள் முதலா அடுத்துவருபழையோரையும் - அன்று முதலாக, அதாவது பிறந்தது முதலாக நம்மைச் சேர்ந்த பக்துக்களையும் ; நாளும் - எப்பொழுதும் ; அயில் - வேல் ; சேவல் - கோழிக்கொடி.

3. அரிச்சந்திர புராணம்.

1. வடம் - ஆலமரம் ; குறள் - பூதம் ; துன்றி - நெருங்கி ; குழுவின் நாப்பண் - கூட்டத்தின் மத்தியில்.

2. இரியல்போக - பறந்தோட ; முண்டகம் - தாமரை ; முருகன் - அழகுடையவன் ; அண்டர் - தேவர் ; மறுகிஏங்க - மனமுருகி வருந்த ; அரற்றல் - புலம்புதல்.

3. உலவாய் - இறவாய், இங்கு இறக்காமல் யென யெச்சமாய்க் கொள்க. செறிந்து - நெருங்கி, மிகுந்து ; அவம் - வீண்.

4. நிரையாய் - கூட்டமாய் ; செடியூடு - (நாணல்) புதரின் உள்ளே.

5. எவர்க்கும் உரவோன் - யாவரினும் பலமுடையவன் ; விறல் - பலம், வீரம் ; வதனு - முகமுடையவனே ; பரிவால் - அன்போடு.

6. இறுக்கும் இறை அன்றி ஏற உகவேம் - குடிகளிடமிருந்து வாங்கக்கூடிய ஆறில் ஒருபாகக் கடமைக்குமேல் நாங்கள் விரும்பியதில்லை. இனிதே உரைப்பம் - நன்மையைத் தருவனவற்றையே சொல்வோம்.

7. மறைநீதியுற்ற - வேதத்திற் கூறிய முறை தவறாது ஆளப்படுகின்ற ; வினை விளைந்த - தீவினைசெய்த ; தவத்தின் விளைவே - தவத்தின் பயனாக வந்தவனே.

8. எழில் - அழகு ; மூன்றாய் விளைந்த கனல் மூழ்க எம்மின் முதலே நடந்த மதலாய் - நாம் அயோத்தியிலிருந்து இங்கு வரும் வழியில் நமக் கெதிரில் உண்டான பெருங் காட்டுத்தீயில், "நான் விழுந்து உங்கள் உயிரைக் காக்கின்றேன்," என்று எங்களுக்கு முன்பாக விரைந்து சென்ற குழந்தையே ; வருந்தல் - வருந்தாதே.

9. மறம் வாள் எயிறு மணி மாசுணத்தின் - பலம் பொருந்திய கூரிய பற்களையும் இரத்தினத்தையும் உடைய பாம்பின்; பிறவாத நித்தன் - பிறக்காத, அதாவது ஆதியில்லாத சிவன், ஆதியில்லாத என்றதால் அந்தமும் இல்லாத என்பது பெறப்படும்.

10. வேலை - சமயம்; நோதகவு - வருத்தும் தன்மை அல்லது நிலைமை.

11. ஏழைமை - இன்மை, இங்கு நன்னெறி அற்ற தன்மையைக் குறிக்கும்; ஆள்செய்தி - ஆளாகச்செய்கின்றாய், உட்படுத்துகின்றாய்.

12. புறத்தை - உடலின் வெளிப்புறத்தை.

13. மருண்டு - மயங்கி; நெடிதுற - மிகவும்; தரியோம் - ஏற்றுக் கொள்ளோம், சகிக்கமாட்டோம்.

14. அம்மை - மறுமை; புலம்கொள - புலனாகும்படி, தெரியும்படி; நிலைமுரணி - நிலைக்கு, அதாவது உண்மைக்கு மாறுபட்டு; ஆழ் வயிறு - பெரிய வயிறு; கூர் - மிகுந்த.

15. பதி - ஊர், ராஜ்யம்; எமக்கு உளது என நினைக்கும் கதி - மேலுலக வாழ்வு; கட்டுரை - சொல்லிய சொல், வாய்மை.

4. பத்தாம் திருமொழி.

1. புடைசூழ் - நான்கு பக்கங்களிலும் சூழ்ந்த; உயக்கொண்ட - உய்யுமாறு அருளிய; கருமுகில் - கரிய மேகம்; தனி - ஒப்பற்ற; சித்திரகூடம் - சபாமண்டபம்.

2. உரம் - மார்பு; குருதி - இரத்தம்; கணை - அம்பு; எதிர்ந்த - எதிர்ப்பட்ட; செந்தளிர்வாய் மலர் நகைசேர் - செந்தளிர் போன்ற வாயிடத்தில் மலராகிய நகையைப் பொருந்திய; தளிர் - வாய்போலும், மலர் - நகைபோலும் விளங்கிற்றென்பதாம். அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் என்றது தில்லை மூவாயிரத்தோரை.

3. செவ்வரி - கண்ணில் படர்ந்துள்ள சிவந்த ரேகை; சினவிடையோன் - கோபம் பொருந்திய ரிஷபத்தை வாகனமாயுடையவன், பரமசிவன்; சிலை - வில்; மழுவாள் ஏந்தி - (மழு - கோடரி) கோடரியை ஆயுதமாகவுடைய பரசுராமர்; வெவ்வரி நற்சிலை - கொடிய, கட்டமைந்த, நல்ல வில்; தடிந்த - குறைத்த, ஒழித்த; தெவ்வர் - பகைவர்; புரிசை - மதிள்; பாங்கர் - இடம்.

4. தொத்து - பூங்கொத்து; சரிகுழல் - சுருண்ட கூந்தல்.

5. வலிவணக்கும் வரை நெடுந்தோள் - வலிய மலைகளையும் வணங்கச் செய்யும் குன்றையொத்த பருத்ததோள்; கலைவணக்கும்

நோக்கு அரக்கி - மானை வென்ற கண்களையுடைய ராக்ஷஸியாகிய சூர்ப்பநகை ; வணக்கி - வளைத்து, வணங்கச்செய்து.

6. கவியரசன் - குரங்குகளுக்கு அரசன், சுக்ரீவன்.

7. குரைகடல் - ஒலிக்கின்ற கடல் ; மறுக - தவிக்க, கலங்கும்படி ; குலை - செய்கரை, அணை.

8. தான் முன் கொன்றான் - இராவணன்.

9. செறிதவச்சம்புகன் - மிக்க தவமுடைய சம்புகன் - அகால மரணம் என்பதே இல்லாத தன் ராஜ்யத்தில் ஒருநாள் ஓர் மறையோன் அகால மரணமடைய, அதற்குக் காரணம் ராஜ்யத்தில் ஏதோ அதர்மம் நடந்திருத்தல்வேண்டும் என ஊகித்து ஆராயுங்கால், சம்புகனென்னும் ஓர் சூத்திரன் கொடுந்தவம் புரிவதாய்த்தெரிந்து அவனைக்கொன்று இறந்த மறையோன் உயிரை மீட்டார் என்பது கதைக்குறிப்பு.

10. சராசரம் - சரம் + அசரம், அசையும் பொருள் அசையாப் பொருள் ; அரவப்பகை - கருடன். லவணாசுரனைக்கொன்றது சத்துருக்நன். தாமம் - உலகம், இடம் ; என்று நின்றான் அவன் இவன் என்று - என்றும் நின்றவனாகிய அவன் (அப்பெருமான்) இவனே என்று ; தொண்டீர் நீர் - பக்தர்களாகிய நீங்கள் — எப்பொழுதும் இறைஞ்சுமின் என முடிக்க.

11 தோன்றிற்றது முதலா - தோன்றினது முதலாக, அவதாரம் முதலாக ; கொல்லியலும் படைத்தானை கொற்றம் ஒள்வாள் கோழியர் கோன் - கொல்லும் திறமுடைய ஆயுதங்களை யேந்திய சேனையையும், வெற்றியைத் தரும் ஒளி பொருந்திய வாளையும் உடைய சோழன் ; நல் இயலின் தமிழ்மாலை - நல்ல இலக்கணங்களோடு கூடிய தமிழ்ப்பாவினால் இயற்றிய மாலையாகிய இந்நூல்.

5. தேவாரம்.

1. அரியானை - அறிவதற்கு அருமையானவனை ; அருமறையின் அகத்தானை - அருமையான வேதங்களின் உட்பொருளாயுள்ளவனை ; தத்துவனை - உண்மைப் பொருளானவனை ; கரியான் - திருமால் ; கலந்து நின்ற பெரியானை என்பதை அரியானை முதலாக கூறப்பட்ட ஒவ்வொன்றோடும் கூட்டுக. பிறவாநாள் - வீணாய்கழிந்தநாள்.

2. திருவை - மங்கலமூர்த்தியை ; உள்ளத்தின் உள்ளே நின்ற கருவை - மனதின் உள்ளே இருக்கும் ஆதிகாரணப் பொருளே ; அருவாய - உருவமற்ற

3. துய்ப்பன - அனுபவிக்கப்படும் பொருள்கள் ; உய்ப்பன - பிறவிக்கடலினின்று ஒருவனை கரையேற்றுபவை ; துரப்பிப்பாய் - ஏவுவாய், அதாவது நினைக்கும்படி செய்வாய் ; ஏறு ஊர்ந்த - இடபத்தை வாகனமாக உடைய.

4. தீ வண்ணர் திறம் - சோதிமயமான சிவபிரானின் பெருமைகளை ; அளி அற்றார் - உனது அருளைப்பெறாத பாவிகள் ; பெயர்த்தும் - மறுபடியும்.

5. சங்கநிதி, பதுமநிதி என்ற இரு நிதியும் குபேரனிடம் உள்ளவை. மங்குவார் அவர் - அழிதற்குரிய அவர் ; மாதேவர் - மகாதேவன், சிவன் ; ஏகாந்தர் அல்லர் ஆகின் - நினையாதவர் ஆனால் (எப்போதும் சிவபெருமானிடத்து மனதைச் செலுத்தாதவராயின்). தொழுநோய் - குஷ்டநோய் ; கங்கையை வார் (நீண்ட) சடையில் கரந்தார்க்கு (மறைத்து வைத்தவர்க்கு) - சிவனுக்கு ; அவர் யாம் வணங்கும் கடவுளார் கண்டீர் எனக் கூட்டுக.

6. காளமேகப்புலவர்

1. மண்ணை அடி (ஆகிய) பதுமத்தால் அளந்தானை, ஆய்ச்சி (யசோதை) அழ அடிப்பது மத்தாலே.

3. கம்பம் மதம் கடம் களிற்றான் - அசைந்தாடுகின்ற மத ஜலம் பெருகும் யானையின் முகமுடையவன் ; உம்பர் - தேவர் ; அயில்வேல் - கூரியவேல் ; கண்ணீராறானன் - கண்ணீர் ஆறு ஆனன் என்றும், கண் ஈராறு (பன்னிரண்டு) ஆனன் என்றும் கொள்க. பம்பு - பரவிய ; பயம் - அச்சம், பால் (பாற்கடல் - பயஸ் என்னும் வடமொழித் திரிபு); அவம் - வீண் ; அன்னம் - சோறு, அன்ன பக்ஷி.

4. மலைநீலி - மலையிற் பிறந்தவள், பார்வதி ; உறிதிருட - கண்ணன்.

5. கார் - மேகம் ; ககனம் - ஆகாசம் ; வார்ஒன்றும்மைகுழலார் - நீண்ட கருமையான கூந்தலையுடையவர்.

7. தாயுமானவர்

1. வடவனல் - வடவாமுகாக்கினி என்னும் தீ ; அந்தரத்து - ஆதாரமில்லாமல் ; அகிலகோடி - கோடிக்கணக்கான எல்லாஉலகங்களும் ; தாழாது - நிலை பிறழாமல் ; தனு - வில் (தனுஸ் என்னும் வடமொழித் திரிபு) சப்த என்னும் வடமொழி சத்த வென்றாயிற்று. வஜ்ரதரன் - தேவேந்திரன் ; சிலை - கல் ; மணி - உருத்திராக்ஷம் அல்லது துளசி ;

குவிய - ஒருமைப்பட, ஒரே விஷயத்தில் ஊன்றி நிற்க; பரிபூரண + ஆனந்தமே - குறைவற்ற ஆனந்தமே.

2. அளகேசன் - அளகாபுரிக்கு இறைவன், குபேரன்; ரஸவாத வித்தை - ரஸம், செம்பு முதலியவற்றைப் பொன்னாகச் செய்யும் வித்தை (Alchemy). காயகற்பம் - உடலை அழியாமல் நெடுநாள் போற்றக்கூடிய ஓர் மருந்து. பாசக்கடல் - பந்தமாகிய கடல், பிறவிக் கடல்.

3. கைவல்யம் - மோக்ஷம்; கைவல்ய ஞானநீதி - மோக்ஷத்திற்கு காரணமாகிய ஞானநெறி; வசனம் - வாக்யம்; வித்தகச்சித்தர் கணமே - உண்மைப் பொருளையறிந்த சித்தர்களின் கூட்டமே.

4. பரம் - பாரம், கடமை; சுகவாரி - இன்பக்கடல்.

5. கந்துக - கட்டுத்தறியை முறிக்கக்கூடிய; இரதம் - ரஸம், பாதரஸம்; வேதித்து - பேதித்து, மாற்றி, (பொன்னாகமாற்றி); சந்ததமும் - எப்பொழுதும்; சத்தாகி - உண்மைப்பொருளாகி; தேஜோமயானந்தமே - ஜோதிவடிவாயும் ஆனந்த ரூபமாயும் உள்ளவனே.

8. திருவெண்காடர்.

4. சதம் - நித்தியம், அழியாமை; கச்சி - காஞ்சிபுரம்.

6. சதி - வஞ்சனை; ஆயார் - ஆராய்ந்தறியார்.

7. காம்பு இணங்கும் பணை தோளார் - மூங்கிலையொத்த உயர்ந்த தோளையுடைய மாதர்; பிணங்குதல் - வழக்கிடுதல், சண்டையிடுதல்; காசினி - பூமி.

8. படி - பூமி; பொன்னின் அம்பலவர் - கனகசபாபதி.

9. மகவரிந்தூட்டியது - சிறுத்தொண்டர்; இளமை துறந்தது - திருநீலகண்டர்; கண் இடந்து (தோண்டி) அப்பியது - கண்ணப்பர்; ஞான்று - சமயத்தில்.

10. அத்தன் - தகப்பன்; நித்தன் - ஆதியந்தமற்றவன்; கர்த்தன் - கர்த்தன், ஆதிகாரணமானவன்.

9. திருக்குறள்.

1. மலர்மிசை - இருதய கமலத்தின்; நிலமிசை - மிகைநிலம், மேலுலகம். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

2. இறைவனடி சேர்ந்தார் நீந்துவர், சேராதார் நீந்தார் எனக் கொள்க; காரணகாரியத்தொடர்ச்சியாக வருவதால் பிறவியைக் கடல் என்றார்.

3. பிற - மனமொழிந்த சொல்லும் வேடமும் ; ஆகுலம் நீர - ஆரவாரமாய தன்மையுடையன. ஆதல் — முன்னிலை ஏவல் வினைமுற்று.

4. இழுக்காஇயன்றது அறம் - இந்நான்கையும் ஒழிந்து நடப்பதே அறமெனப்படும்.

5. அன்று - இறக்கும்பொழுது ; பொன்றுங்கால் பொன்றாத் துணை - இவ்வுடலழியுங்காலத்தில் தான் அழியாது நின்று உதவும் துணையாம்.

6. துப்பு - பலம் ; துப்பாயார் - பலமாய் இருந்தவர், உதவிசெய்தவர்.

7. கொன்று அன்ன - கொலைக்கு சமானமான ; உள்ள - நினைக்க; நன்றி - நன்மை, உதவி ; பிறர் செய்த தீமையை மறத்தற்கு உபாயம் கூறியவாறு.

8. எந்நன்றி கொன்றார்க்கும் - எந்த அறத்தைக் கெடுத்தவர்க்கும் ; உய்வு உண்டு - பிராயச்சித்தங்களினால் அப்பாவங்களினின்று தம்மைக் காத்துக்கொள்ளும் உபாயம் உண்டு.

9. ஆக்கம் - செல்வம் ; உயர்வு - உயர்குலம், மேன்மை.

10. எய்தாப்பழி - அடையக்கூடாத பழி.

12. அழுக்கறுப்பான் - பொறாமைப்படுபவன் ; சுற்றம் கெடும் என்றதனால் அவன் கேடு சொல்ல வேண்டாதாயிற்று.

13. அவ்வித்து - பொறாமல், சகியாமல் ; தவ்வை - மூத்தவள் ; தவ்வையை - தவ்வைக்கு (உருபுமயக்கம்). செய்யவள் - இலக்குமி.

14. தீவினையைப்போல் வேறு பிறப்புகளிலும் வந்து தீ சுடாதாகையால் (சோராதாகையால்), அது தீயினும் அஞ்சப்படுவதாயிற்று. தீயவை - தனது நன்மையின்பொருட்டு செய்யும் தீவினைகள்.

15. பெயர்த்து - மறுபடியும், மேல்வரும் பிறப்புகள்தோறும்.

16. வீயாது அடி உறைந்த அற்று - (கெடுதாகப்போயும்) அவனை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மையை உடையது.

17. எனினும் என்றதன் உம்மை அங்ஙனம் கூறுவார் இலர் என்பதை விளக்கிற்று. ஆறு - நெறி, வழி.

18. அற்றார் - வறியர் ; அழிபசி - எல்லா அறங்களையும் அழிக்கின்ற பசி ; வைப்புழி - சேமித்துவைக்கும் இடம்.

19. உவக்கும் இன்பம் - ஈயப்பெற்றார் உவத்தலால் ஈந்தவர் எய்தும் இன்பம்; வன்கணவர் - அருளில்லாதவர்; வைத்து - ஈத்துண்ணாது சேமித்து வைத்து.

20. ஈதல் இயையாக்கடை - ஈதற்கு இயலாதபொழுது ; சாதலின் — ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள். பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலால், இனிதாயிற்று.

21. உயிர் நிலை உண்ணாமையுள்ளது - உலகில் உடலோடு உயிர் நிற்றல் ஊன் உண்ணாமை என்னும் அறத்தின் கண்ணது. அளறு - நரகம் ; அண்ணாத்தல் செய்யாது - உமிழ்தற்கு வாயை திறவாது ; உண்ண - உண்ணின்.

22. அவி - ஹவிஸ் என்னும் வடமொழித்திரிபு, வேள்வித்தீயில் பெய்யும் நெய் முதலியன ; செகுத்து - கொன்று.

25. தகை அவாய் - குணங்களை அவாவி ; பிணித்தல் - கட்டுதல், தன்னைப்பிரியாது செய்தல் ; வேட்ப - விரும்பும்படி ; கேளாரும் - பகைமையால் ஏற்றுக்கொள்ளாதவரும்.

26. (தாம் சொல்லும்) அச்சொல்லை பிறிதோர் சொல் (ஆகிய) வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து, சொல்லைச்சொல்லுக எனக்கூட்டுக.

27. மன்றகாமுறுவர் - மிகவும் விரும்புவார்கள்.

28. நோய் - தெய்வத்தாலும் மக்களாலும் வரும் துன்பங்கள் ; உறாமை - வாராமை ; பெற்றியார் - தன்மை உடையவர்.

29. செற்றார் - பகைவர் ; செயக்கிடந்தது - செய்யத்தகுந்த துன்பங்கள் ; தானொழுகவல்லானை - தானும் முறையறிந்து நடக்கவல்லானை.

30. இடிப்பார் - தீயவழியிற் சென்றால் தடுத்து நன்னெறிப்படுத்துபவர் ; ஏமரா - காவலற்ற ; ஏமம் (காவல்) ஏம் என இடைகுறைந்து நின்றது ; இலானும் - இலன் ஆயினும், இல்லாவிட்டாலும்.

Printed at the "EDWARD PRESS,"—Negapatam.
Published by S. M. Raghunatha Bharathy, Negapatam.

10. ப்ரஹ்லாத சரித்திரம்.

1. ஏர் - அழகு; தழைந்த - மிகுந்த; புதல்வர் நால்வர் - ஆஹ்லாதன், சமுஹ்லாதன், இமுஹ்லாதன், ப்ரஹ்லாதன். திறம் - குணம்.

2. ஓர் ஊழி - ஓர் சமயம்; கார் உரு - கரிய உருவம்.

4. பிரசம்மாந்திய - கள் குடித்த; மத்தன் - வெறியன்; யாரும் - எவரும்.

6. வீறும் - மிகும், மேன்மையுறும்; விகலம் - கலக்கம்.

7. தாது - பூவிதழ்; இணர் - பூங்கொத்து.

8. பொற்ற - பொன்னாலாகிய; வெள்ளிமைந்தர் - சுக்கிரன் புதல்வர் - சண்டன், அமர்க்கன்.

9. கொண்க - கணவனே; சூட்டு அண்ணல் - கிரீடம் தரித்த பெருமானே; அரா அமளி - பாம்புப்படுக்கை, சேஷ சயனம்; கார் - மேகம்.

10. இளவல் - இரணியாக்ஷதன்; மன்ற - மிகவும். (மன்று-இகழ்ச்சிக்குறி).

11. உன்னல் - நினையற்க; வள் - இதழ் - பொலன் - தாமம் - மார்ப - குவிந்த இதழையுடைய பொன்னாலாகிய மாலையணிந்த மார்பனே.

12. இருபிறப்பினோர் - பிராமணர், சண்டாமர்க்கர்; முப்பால் அறம், பொருள், இன்பமென்பவை; மறைவடித்த - வேதசாரமாகிய.

13. தென்தமிழ் மலயம் - பொதியமலை; மன்றல் - வாசனை; குறங்கு - தொடை; தழீஇ - தழுவி; நாமம் - அச்சம்.

14. காதை - கதை; காரணன் - ஆதி, முதற்பொருள்; போதில் நான்முகன் - தாமரையில் வசிக்கும் பிரமன்; சீதரன் - இலக்குமியைத் தரித்தவன், திருமால் (இதுவும் கீழ்க்கவியுங் குளகம்).

15. சுரும்பு - வண்டு; மூசுதல் - மொய்த்தல்; தேறல் - தேன்; பொருவு - ஒப்பு.

16. அறங்கரை மழலை - அறம் கரைந்தன்ன மழலை, அறம் ஓதும் மழலை எனினுமாம்; குருதி - இரத்தம்; இறைஞ்சி நிற்குநரை - தொழுது நிற்பவரை; வல்லே - விரைவில்; அலங்கல் - மாலை; அலங்கல் மாலை - ஒருபொருட்பன்மொழி; நிறம் - மார்பு; நெருப்பு உருத்தனைய வீரன் - நெருப்பு கோபித்தாற்போன்ற தன்மையை உடையவன்.

17. மூவுரு - பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மூன்று உருவம்; முத்தொழில் - சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்; கொற்றம் - ஜயம்; குமிழி - தலை, உச்சி; வெள்வேல் - வெள்ளிலை (வெற்றிலை) போன்றவேல்.

18. துப்பில் - பலத்தோடு; வேல்உழவர் - வேற்படையுடையோர்; சூலாம் - விளக்குகின்ற; கனகன் - இரணியன் (கனகம், இரணியம்- தங்கம்) தங்கமயமான உருவமுடையோன்; மாதிரம் - திசை; உரறினன் - உறுமினன்.

19. படம் அரா அரசின் - ஆதிசேஷனுடைய, பணுமணி - படத்திலுள்ள இரத்தினம்; கதுவி - பற்றி; பாந்தள்-பாம்பு.

20. கொண்டல் - மேகம்; இங்கு வேழம் என்றது கம்ஸனுல் கிருஷ்ணன்மேல் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும் யானையை; கோடு-கொம்பு, தந்தம்; திரை - அலை; சேர்ப்பன் - சார்ந்தவன்; புழைக்கை - துவாரமுள்ளகை, துதிக்கை; நால்வாய் தொங்குகின்ற வாய்.

21. புடையொரு வயிற்றுள் வைத்து - வயிற்றுள் ஒரு புடை (பக்கத்தில்) வைத்து; வீக்கி - கட்டி; புணரி - கடல்.

22. சேடுவரை - மந்தரமலை; முகந்து பொங்கி - கிழுழுந்திக் கிளம்பி; விசும்பு கோத்த - ஆகாயமளாவிய; முகட்டு - உச்சியில்; சினை - கிளை; பாசிலை - பச்சை இலை; யாத்து-கட்டி.

23. இறுதி - முடிவு, அழிவு; அவுணன் - அரக்கன், இரணியன்; அற்றம் - மெலிவு.

24. குரவன் - குரு; தொடையல் - மாலை; யாழ் - வீணை; முனிவர் - நாரதர்; வல்லிதின் - அமைதியோடு, கவனமாய்.

25. தாமரை உறைவோன் மைந்தன் - பிரமன் புதல்வனாகிய நாரதன்; சுடிகை - தலை, உச்சி; பைத்த - நச்சுப்பையையுடைய பால்பட - வகைக்கு, விரிவாய்.

26. அமரர் - தேவர்; பைந்தார் - பசுமையான மாலை, புதிய மாலை; நூறி - அழித்து; என்னையை - என் அன்னையை - கயாதுவை (லீலாவதி என்றும் சொல்வர்).

27. எந்திழை - அன்மொழித்தொகை, பூண்ட ஆபரணமுடையவள்.

28. திகிரியம்மான் - சக்கரபாணி; மாழ்கும் - வருந்தும்; கோல்தொடி - அழகிய வளையலை யணிந்தவள்.

29. காட்சி மெய்ந்நூல் - மெய்ஞ்ஞான நூல்; வயங்கு எழில் - விளங்குகின்ற அழகு; வாங்குவில் - நீண்ட வளைந்தவில்.

30. மிசையும் - அநுபவிக்கும்; உனி- உன்னி, நினைத்து; ஆக்கை - உடல்.

31. விரகு இலா - அறிவற்ற; அவம் - வீண்; கண்படை - தூக்கம் (இஃது கீழ்க்கவியோடு குளகம்).

32. நெடியன் - திருமால்; இறையும் - கணமேனும்.

33. எழ்வகைப் பிறவி - தேவர் (14) மனிதர், (9) விலங்கு, (10) பறவை, (10) ஊர்வன, (11) நீர் வாழ்வன, (10) தாவரம், (20) ஆக 84 லக்ஷமாம்; இரிதர - ஓட, ஒழிய; குணிப்பார் - கணக்கிடுவார்

34. நீவம் - அகங்காரம், பற்று; கட்டொடு நிகழ்த்தின் - ஒருமிக்கச்செய்தால்; கூவம் - கிணறு; மூன்றுரும் தாவம் (தாபம்) ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதி பௌதிகம் என்பன.

35. இன்னல் - துன்பம்; விழைவு - ஆசை.

36. விலங்கு பூண் - பிரகாசிக்கின்ற ஆபரணம்; விலங்கெனத்தளை, கட்டு என; மயர்ந்து - மயங்கி; கருதா- கருதி.

37. அங்கியும் தூமமும்போல்--புகையைக்கண்ட விடத்துதீ உண்டென அநுமானிப்பதுபோல் -- உடற்கிசை விகாரங்கள் ஆறுவன- ஜென்மம், மிருத்யு, ஜரை, வியாதி, சுகம், துக்கம், என்பன; பேறு, இளமை; இன்பம், பிணி. மூப்பு, சாக்காடு என்ற ஆறெனினுமாம்

38. பாதவம் - மரம்; கோது - குற்றம்; பிறங்கும் - விளங்குகின்ற.

39. காட்டின் மேவிய கானவிற் புனலென - பாலைவனத்துக் கானலின் மயக்கத்தால் தோன்றும் நீர்போல்; முறை முறைபோந்த- வரிசைக்கிரமமாகத்தோன்றிய; மதியால் நாட்டுபோதம் - புத்தியால் ஆராய்ந்து நிச்சயிக்கப்பட்ட மெய்யறிவு; நவை - குற்றம்.

41. நந்தல் - அழிவு; முக்குணம் - சத்வம், ரஜஸ்--தமஸ் என்பவை. மூன்றவத்தை - நனவு, கனவு, தூக்கம் என்பவை.

42. நிலவும் - விளங்கும்; நித்தியம் - அழியாப்பொருள்; இலகும்- பிரகாசிக்கின்ற; சித்து--ஞானம்; அலகு இல் - அளவிடக்கூடாத.

43. விளைவு--பயன், உண்டாதல்; துஞ்சுதல் - தூக்கம்.

44. மருவுற - சேர; புளகம் - மயிர்க்கூச்சல், ஆநந்தவெள்ளம் ஊற்றின் எழும் என்க.

45. தெவிட்டிடா, கருதும் - பெயரெச்சங்கள், உறைபவர் என்பதைக்கொண்டு முடிந்தன; நலன்--சம்பத்துக்கள்; ஈமம்-மயானம்.

46. அயன் - பிரமன்; புரந்தராதியர் - இந்திரன் முதலானவர் நயம் தரும் வினை - பயனை விரும்பிச்செய்யும் வினை; வயம் - வெற்றி.

47. தெரிவு இல் - உண்மை யறிவற்ற; மா-விலங்கு; தாவில்-குற்றமற்ற; சரதம்—சத்தியம்.

48 அன்பு செய்வது - எழுவாய், சாவதே பயனிலை.

49. அமலன் - குற்றமற்றவன், திருமால்; அந்நிலை - அப்பொழுது.

50. தரங்கம் - அலை; முந்நீர் - கடல்; (ஆற்று நீர், ஊற்றுநீர், மழைநீர் என முந்நீர் உள்ளது) நாட்டம் - கண்.

51. வீறு - பலம்; ஆறு அறிபுதல்வன் - நல்ல வழியை அறிந்த புதல்வன்; வதனம் - முகம்.

52. இழுதை - பேய்; நாறுபைங்கமலை - மணமுடைய, புதிய (Fresh), தாமரையில் உறையும் இலக்குமி; கேள்வன் - கணவன்; சான்று - சாக்ஷி; தேற்றம் - நிச்சயம், தெளியப்பட்ட பொருள்; மனு நவிலுநோர்க்கு ஊறுசெய்குதல் - மந்திரத்தைச்சொல்லும் தன்மையோர்க்கு துன்பம் செய்குதல்.

53. தண்துளி நறவுகாலும் - குளிர்ந்த தேன் துளிகளை வீசும்; பொகுட்டு - தாமரைக்கொட்டை; ஓங்க - கூர்தல்; வயங்க - பிரகாசிக்க; உருமென - இடிபோல்; உலம்பினன் - உறுமினன்.

54. கெழுவ - மொய்க்க; அடலுடை ஆழி - வலிமை பொருந்திய சக்கரம் (கடல் எனினுமாம்).

55 மாற்றம் - சொல்; வெதுப்ப - வருத்த; பரிதி - சூரியன்; பருஉதாள் - பருத்த அடிப்புறம்.

56. அசனி - இடி; எறுழ்வலி - ஒருபொருட் பன்மொழி, மிகுந்த பலம்; ஆடகம் - பொன்; மால் வரை பனிப்ப - பெரிய மலைகளும் குலுங்க; வெய்தின் - விரைவில்; வடித்த - அழகுபெறச் செய்யப்பட்ட; ஆளரி - நரசிங்கம்.

57. மருப்பு இளம் திங்கள் அன்ன - யானைத் தந்தம்போல் வளைந்த மூன்றாம்பிறைச் சந்திரன்போன்ற; வாளுகிர் நுதியின் - ஒளி பொருந்திய நகத்தின் நுனியால்; சேந்து - சிவந்து; கிழன்று - ஒளி வீசி; அரத்தம் - இரத்தம்.

59. வள்உகிர் - வளைந்த நகம்; மாழ்கி - வருந்தி; வலியினீங்கி - வலியிழந்து.

60. கழை களி - கட்டுத்தறியை முறிக்கும்; கவான் - தொடை; போழ்ந்து - பிளந்து; கண்ணி - மாலை; புனைதல் - சூடுதல்.

62. கஞ்சம் - தாமரை; கண்ணுதல் - சிவன்; தெரிவை-அணங்கு பெண் - இலக்குமி.

63. கிரி+ஈசன் — கிரீசன், சிவன்; வாசவன் - இந்திரன்; சித்தர், இயக்கர், கந்தர்வர் - தேவர்களின் சாதிப்பெயர்; தென்புலத்தோர் - பிதுர்லோக வாசிகள்; பரவுதல் — துதித்தல்.

64. புரந்தோய் - காத்தவனே; அலக்கண் - துக்கம்.

65. உவரி - கடல்; கவிமதம் - திரண்டமதம்; தோன்றல் - குமாரன்.

66. அஞ்சன வண்ணம்; மைநிறம், கருமைநிறம்; வளை - சக்கரம்; சிறுபுறம் — முதுகு; தடவந்து - தடவி (தடவரல் - பகுதி) மஞ்ச — மைந்த என்பதன் மரூஉ (அண்மைவிளி) வேட்ட — விரும்பிய.

67. விழைவு அற எறிந்தார் — ஆசையை முற்றும் ஒழித்தவர்; விழுமை — மேன்மை; புயல் — மேகம்.

70. சுடு - சக்கரம்; மருள் - மயக்கம்; தெருள் - தெளிவு, ஞானம்.

72. ஒருவை — ஒன்றாகிய தன்மையை உடையாய் (முன்னிலை ஒருமை வினையாலணையும் பெயர்) வழும் — குற்றம்; வல்லுநர் — வல்லவர்.

75. தோற்றிடின் — பிறந்தால்; வீயும் காலை — இறக்கும்போது; தேத்துற்று — தேயத்து உற்று, இடத்தை அடைந்து.

76. விழுச்சிறப்பு - விழுமிய (உயர்ந்த) சிறப்பு; பற்றெறிந்து - பற்று ஒழிந்த; குற்றம் இல் — குறைவற்ற, மிக்க.

78. மடங்கல் — சிங்கம்; முகில் — மேகம்.

79. உயிர்த்தவாற்றால் — பெற்றதனால்; புனிதம் — மோக்ஷம்.

81. திரு எய்த நல்கி — இருப்பிடத்தையடைய விடைகொடுத்து; புல்ல — சேர, அணைய; ஆயிடை — அவ்விடத்தினின்று (அகரச்சுட்டு நீண்டது).

82. புங்கவன் — உயர்ந்தவன்; பணி — ஆக்ஞை, ஆணை.

83. பூட்சியோடு — அவ்வுருவத்தோடு, துதியோடு எனினுமாம்.

84. துகள் இலா — குற்றமற்ற; இன்பவாரியின் எய்துவர் — இன்பக் கடலாகிய மோக்ஷத்தை யடைவார்.

---

11 பரதன் குகனைக் காண்டல்.

1. மற்கலை - மரவுரி; ஒழிந்தான் - மெய்ம்மறந்தான்.

2. நம்பி - ஆண் பெயர், பரதன்; தலைநின்றான் - மேற்கொண்டான்; பிழைப்பு - பிழை, குற்றம்.

3. உலையாத - கெடாத; கொண்டிருந்தான் - காலவழுவமைதி; பெயர்தல் - இடம்மாறுதல்; நாவாய் - படகு, மரக்கலம்.

4 மலரிருந்த அந்தணன் - பிரமன் ; சீர்த்தி - கீர்த்தி.

5. புளினர் வேந்தன் - வேடர்கட்கு அரசன் ; எழு — தூண் ; முழுதுலகு - உலகுமுழுதும், (சொன்னிலை மாறல்) ; உம், விகாரத்தாற் றொக்கது ; கொணர்வான - வான் - வினையெச்சவிகுதி ; வந்தேன் என்றான் என முடிக்க.

6. கிராதர் - வேடுவர் ; கிளர்ந்தெழும் உயிரனாகி - மேற்கிளப்பிச் செல்லும் உயிரை உடையவனாகி. அதாவது, சோகமடைந்து ; வீங்க - மிக ; தீட்டரும்மேனி - சித்தரித்து எழுதவொண்ணாத மேனி.

7. நீத்து - விலக்கி ; (நீ - பகுதி) ; சிந்தனை - கவலை, துக்கம் ; கேழ் -ஒப்பு.

8. எயினனேன் - எயினனாகிய நான், (எயினன் - வேடன்); இரவியென்பான் தன்புகழ்க்கற்றை-சூரியன் என்பவனுடைய பிரகாசத்தின் தொகுதி ; தவிர்க்குமாபோல் - விலக்குவதுபோல, மறைப்பதுபோல ; ; உரவுத்தோளாய் - பலம்பொருந்திய தோள்களையுடையவனே.

9. புலவுவேற்கை - புலால்நாற்றமுடைய வேலேந்தும் கை ; பொருவுஇல் - ஒப்பற்ற ; அமைவில் - பொருந்துமாறு, முறைப்படி; பணிவோமெனினுமாம்.

10. வாரி - கடல்; நம்முன் - நமது அண்ணன்; வீர-அண்மைவிளி.

11. வார் - நீண்ட ; பருவரல்பரவை - துன்பக்கடல் ; வார் மணிப்புனல் - நீண்ட (வற்றாத) முத்துப்போன்ற கண்ணீர் ; மண்ணுநீர் - மஞ்சனநீர், ஸ்நானஜலம்.

12. சுடரும் - காசு - குயின்ற - உயர் - மகுடம் - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள் பதித்தகிரீடம் ; இத்தகைய கன்மனமுடைய யான் முன்பு கூறியவாறன்றி இனிமகுடம் சூட இசையினும் இசைவேன் என தமது கடினமனதை இழித்துக்கூறியதாம்.

13. தூண்தர நிவந்த - தூணைப்போல பருத்துயர்ந்த ; சூழல் - இடம் ; நிமிர்ந்த கேயம் - மிக்க அன்பு.

14. அல்லையாண்டமைந்தமேனி - இருளினும் கரிய உருவம் (அல்- இரவு) ; வெய்துயிர்ப்பு - பெருமூச்சு ; கங்குல் -. இரவு.

15. தோற்றத்தேம் - தன்மைப்பன்மைக் குறிப்பு வினையாலணையும் பெயர் ; அழகிது என் அடிமை ; என்றது இகழ்ச்சியால் ; என்பதை அன்பதுக்கு என்பன செய்யுள் விகாரத்தால் என்பத்தை, அன்பத்துக்கு எனவந்தன.

சுபம். சுபம்.